செ.வெ.எண்-07 நாள்-06.05.2017

# பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு மத்திய அரசின் தகவல் மற்றும் ஒளிப்பரப்பு அமைச்சகம் 17.04.2017 அன்று டிஜிட்டல் DAS உரிமம் வழங்கி ஆணையிட்டது. ஆதனை தொடர்ந்து தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திடம் ஏற்கனவே பதிவு செய்து LCO எண் பெற்றுள்ள உள்ளூர் கேபிள் டிவி ஆபரேட்டர்கள், இந்நிறுவனத்தின் டிஜிட்டல் கேபிள் டிவி சிக்னலைப் பெற்று தொடர்ந்து தொழில் செய்வதற்கு பதிவு செய்து வருகின்றனர். டிஜிட்டல் கேபிள் டிவி சேவையை தமிழகத்தில் விரைந்து செயல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, செட்டாப்பாக்ஸ் கொள்முதல் வெய்வதற்காக 06.05.2017 அன்று உலகளாவிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. துமிழ்நாடு கேபிள் டிவி நிறுவனத்தின் டிஜிட்டல் சிக்னல் சென்னையில் உள்ள இந்நிறுவனத்தின் கட்டுப்பாட்டு அறையிலிருந்து வழங்கப்படும். இதற்காக இக்கட்டுப்பாட்டு அறையின் MPEG2 ஆக உயர்த்தப்படும். இந்நிறுவனத்தின் டிஜிட்டல் சிக்னல் ரெயில்டெல் மற்றும் பி.எஸ்.என்.எல் நிறுவனங்களின் ஃபைபர் வாயிலாக வழங்கப்படும். இந்நிறுவனத்தின் டிஜிட்டல் சிக்னலை உள்ளூர் கேபிள் டிவி ஆப்ரேட்டர்கள் ரெயில்டெல் மற்றும் பி.எஸ்.என்.எல் நிறுவனங்களின் எக்ஸ்சேஞ்-லிருந்து பெற்றுக்கொள்ளலாம். இந்நிறுவனத்தில் பதிவு செய்துள்ள உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்களுக்கு செட்டாப்பாக்ஸ்கள் இலவசமாக வழங்கப்படும். தமிழ்நாடு கேபிள் டிவி நிறுவனம் 200 சேனல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.